செ. கு. எண்:162 நாள்:28.04.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.4.2012

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், தேவன்குறிச்சி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 28.4.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில், தேவன்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. வாலகுருநாதன் என்பவரின் மனைவி திருமதி. லெட்சுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த லெட்சுமி குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த லெட்சுமியின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயடைந்தவருக்கு 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவருக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.